https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# முஹியூதீன் புராணம் ஒரு பகுப்பாய்வு

**திரு. ந. சாத் பிளாலி**
முனைவர்பட்ட ஆய்வாளர்
அரபு மற்றும் இஸ்லாமிய ஆய்வுத்துறை

**முனைவர் ஏ. அப்துல் ஹை**
மேற்பார்வையாளர், அரபு மற்றும் இஸ்லாமிய ஆய்வுத் துறை
புலமுதன்மையர் மற்றும் இணைப் பேராசிரியர்
பி.எஸ்.அப்துர்ரஹ்மான் கிரசென்ட் அறிவியல் மற்றும்
தொழில்நுட்ப நிறுவனம், வண்டலூர் சென்னை - 48

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழகத்திற்கும் இஸ்லாத்திற்குமான பிணைப்பு வணிகத்தின் மூலம் உருவானது என்பது அசைக்க முடியாத சத்யமாகும். இங்குள்ள தமிழ் பேசும் மக்கள் தங்களது வாழ்வியல் நெறியை அரேபியர்களிடம் வணிகத்தின் மூலம் சம்பாதித்தார்கள் அதற்கு சான்றாக பல சங்கதமிழ் இலக்கியங்கள் அமைந்துள்ளன மேலும் அரேபியர்களை யவனர்கள் என்று தமிழர்கள் அழைத்திருந்தனர் என்பதும் உண்மையாகும்.

“மேலும் தமிழகத்தில் அரபி வணிகர்களான இஸ்லாமியர்களும் அவர்களது போதகர்களான இறைவனது ஆனுபூதி பெற்ற வலிமார்களும் இறைநேசர்களும் கடற்கரை பகுதிகளிலும் பட்டணங்களிலும் ஆங்காங்கே சிறு குடியிருப்பு களையும் அமைத்து வாழ்ந்தனர். தமிழகம் போந்த இத்தகைய அரேபிய வணிகர்களது குடியிருப்புகள் சங்க காலத்திலும் அதற்கு பின்னரும் "யவனாச்சேரி" என வழங்கப்பட்டது”. (முஸ்லிம்களும் தமிழகமும்\ முனைவர் எஸ் எம் கமால்\ pg-24) என்று முனைவர் எஸ். எம். கமால் அவர்கள் இயற்றிய "முஸ்லிம்களும் தமிழகமும் என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

தமிழ் இலக்கியத்தில் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் பற்றி எண்ணிலடங்காத கவிதைகளும் பாடல்களும் இருக்கும் நிலையில் இங்கு வந்த இறைநேசர்களை போற்றி பல பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன. இதில் முஹியூதீன் புராணம் என்ற நூல் தனிப்பெரும் இலக்கிய காப்பியமாக **கருதப்படுவதுமில்லாமல்** இதை பற்றி பல ஆய்வுகளும் மேற்கொள்ள பட்டுள்ளது 19ஆம் நூற்றாண்டில் பதுறுதீன் புலவர்களால் இயற்றப்பட்ட இந்த நூல் பாரசீக தேசத்தில் ஜீலான் எனும் நாட்டில் பிறந்த ஷெய்க்அப்துல் காதிர் ஜீலானியின் வாழ்க்கை வரலாற்றையும் இறைநேசர்களின் பட்டியலில் அவர்களது அந்தஸ்த்தையும் ஏழு காண்டங்களில் எடுத்துரைக்கிறது.

இந்த ஆய்வு கட்டுரையானது முஹியூதீன் புராணம் எனும் இந்த நூலின் அடிப்படையான ஆதாரங்களை தேடி பயணிக்கும் ஒரு பகுப்பாய்வு ஆகும். மேலும் ஷெய்க்அப்துல் காதிர் ஜீலானியை பற்றி தமிழ் இலக்கியத்தில் உள்ள சித்தரிப்பின் உண்மைத்தன்மையை தெளிவுபடுத்துதலும் ஆகும்.

**திறவுச்சொற்கள்:** முஹியூதீன் புராணம், பதுறுதீன் புலவர்கள், அப்துல் காதிர் ஜீலானி, சூபித்துவம்.

## முன்னுரை

வானகத்தையும் வையகத்தாயும் படைத்து அதற்குள் மனிதனின் வாழ்க்கையை படைத்து சீரான நெறியை வள்ளல் நபியின் வாயிலாக வழங்கிய சர்வ வல்லவனாகிய அல்லாஹு˜விற்கே எல்லா புகழும் புகழ்ச்சியும் உரித்தாவதாக. அவனது வற்றாத கருணையும் வளங்கொழியாத நேசமும் மக்கத்து ராஜா மதீனத்து ரோஜா பெருமான் நபிகள் நாயகம் முஹம்மதவர்கள் மீதும் அவரது அடிச்சுவற்றை பின்பற்றி வாழ்ந்த உத்தம சத்திய தோழர்களின் மீதும் என்றென்றும் நின்று நிலவட்டுமாக.

தமிழகம் போந்த சூபிகளின் பட்டியலில் தலைசிறந்தவராம் குத்பு நாயகம் முஹியூதீன் அப்துல் காதிர் ஜீலானி அவர்தம் ஆன்மிக ஒளியை பாரெங்கும் பகிர்ந்தவர் என்ற மெய் நிலையை ஈ.எம். நாகூர் ஹனிபா "மெய் நிலை கண்ட ஞானி" என்ற பாடலின் வழியாக தமிழக மக்களுக்கு அழகாக உணர்த்தியுள்ளார். மேலும் முஹியூதீன் அப்துல் காதிர் ஜீலானி என்பவரை தமிழக மக்களின் மனதில் முஹியூதீன் ஆண்டகை என்றே அறியப் படுவது நிதர்சனமான உண்மையாகும்.

சூஃபியிசம் என்பது இஸ்லாத்தின் ஆன்மீக பரிமாணத்தை வலியுறுத்தும் ஒரு பாதை யாகும். இது இறைவனுடன் நேரடி உள்விணையம் ஏற்படுத்தும் ஒரு வகையான பயணமாகக் கருதப்படுகிறது. இதன் முக்கிய நோக்கம் தன்னலத்தை வென்று, இறைவனு டன் சேரும் நிலையைக் கோட்பதாகும். சூஃபியிசம் தமிழ்நாட்டுக்கு பெரும்பாலும் முசலீம் வர்த்தகர்களும், சான்றோர்களும் கொண்டு வந்ததாகக் கூறப்படுகிறது. காதிரிய்யா, சிஷ்திய்யா, நக்ஷபந்திய்யா போன்ற சூஃபி சில்சிலாக்கள் இங்கு காலப் போக்கில் விழிப்புணர்வு ஏற்படுத்தின. ஆனால், இவை இங்கு பரவியபோது, இப்பகுதியின் சமூகப் பண்பாடுகளும், வழிபாட்டு முறைகளும் அதனுடன் கலந்து விட்டன.

தமிழ்நாட்டு சூஃபி மரபுகள் குறிப்பாக ஊர்குழத்துக் கந்தூரி, ஊர்திகள், விளக்கழகு போன்றவை இஸ்லாமிய அடிப்படைகளு டன் நேரடியாக தொடர்பில்லாதவை. இவை இந்நிலத்தின் ஹிந்தூ மற்றும் நாட்டுப்புற வழிபாட்டு மரபுகளுடன் பின்னிப்பிணைந் திருக்கின்றன. இதனால் சில சமய நிபுணர் கள், "இது இஸ்லாத்தின் உண்மையான போதனைகளுக்கு விரோதமான கலப்பு வடிவம்" என விமர்சிக்கின்றனர்.

ஷெய்க் அப்துல் காதிர் அல்—ஜிலானி (ரஹ்) அவர்கள் ஒரு மிக முக்கியமான சூஃபி வழிகாட்டி. அவரது வாழ்கைபோக்கும் போதனைகளும் மிகவும் ஆழமான ஆன்மீக உரைகளை கொண்டவை. ஆனால், தமிழ்நாட் டில் அவரது நினைவுகள் பெரும்பாலும் அற்புதங்களோடு மட்டுமே குறிக்கப்படுகி ன்றன, இது அவரது இயல்பான ஆன்மீக வழிகாட்டுதல்களை மறைத்து விடுகிறது.

## யார் இந்த ஜீலானி

பாரசீகத்தின் ஜிலானில் பிறந்த ஷெய்க் அப்துல் காதிர் ஜிலானி, 17 வயதில் பக்தாத்திற்கு கல்வி கற்கச் சென்றார். அபுல் வஃபா இப்னு அகீல் போன்ற சிறந்த அறிஞர்களிடம் கல்வி பயின்ற இவர், பின்னர் ஷெய்க் அபுல்-கைர் ஹமத் அத்-தப்பாஸ் உள்ளிட்ட சூஃபி ஆசிரியர்களிடம் ஆன்மிகப் பயிற்சி பெற்றார். ஹன்பலி நீதிமுறையையும் சூஃபி மெய்ஞ்ஞானத் தையும் தனித்துவமாக இணைத்த இவர், காதிரிய்யா தரீக்கா எனப்படும் முதல் ஒழுங்கமைக்கப்பட்ட சூஃபி சங்கத்தை நிறுவினார்.

'பைஅத்' (ஆன்மிக உறுதிமொழி) முறையை அறிமுகப்படுத்திய இவர், 'ஃபத் அர்-ரப்பானி' போன்ற அடிப்படை நூல்களை எழுதினார். மதப் புதுமைகளை எதிர்த்த இவரது போதனைகள் சமூக நீதி, சமத்துவம் ஆகியவற்றை வலியுறுத்தின. எல்லா சமூக பிரிவினருக்கும் ஆன்மிக வழிகாட்டுதல் அளித்த இவர், சட்ட அறிவியலுக்கும் ஆன்மிக ஞானத்திற்கும் இடையே ஒரு நிலையான இணைப்பை ஏற்படுத்தினார். இன்றும் உலகளவில் செயல்பட்டு வரும் காதிரிய்யா இயக்கம் மூலமும், இஸ்லாமிய சிந்தனையில் ஏற்படுத்திய ஆழமான தாக்கம் மூலமும், இவரது மரபு இன்றும் லட்சக்கண க்கானோரை ஈர்க்கும் வகையில் வாழ்ந்து கொண்டிருக்கிறது. தனது உணர்ச்சிப்பூர்வ மான தனது உரை ஒன்றில் பின்வருமாறு கூறினார்.

“அல்லாஹ்வின் தூதரினால் கட்டியெழுப்பப் பட்ட கட்டடம், ஒவ்வொரு செங்கல்லாக அப்புறப்படுத்தப்பட்டுஇப்பொழுது உடைந்து சுக்கு நூறாகி விழும்நிலையில் உள்ளது. மனிதர்களே வாருங்கள்! உடைந்ததைக் கட்டியெழுப்புவோம். பாழடைந் திருப்பதைப் புதுப்பித்துச் செப்பனிடுவோம். இந்தப் பணி முடியும்வரை நாம் ஒன்றுபட்டு ஒரு குழுவாகச் செயற்பட வேண்டும். சூரியனே, சந்திரனே, நட்சத்திரக் கூட்டமே! எனது இப்பணிக்கு உதவி புரிய வாருங்கள்.

இஸ்லாம் கண்ணீர் வடிக்கின்றது, இஸ்லாத்தில் இல்லாத நூதன அனுஷ்டானங்களை உருவாக்கிய நயவஞ்சகர்களின் அநியாயம் காரணமாக அது வேதனைக் குரல் எழுப்புகின்றது. உங்கள் மூதாதையர்களைப் பாருங்கள். அவர்கள் உங்களைப் போன்று வாழ்ந்தார் கள். ஆனால், நன்மையை ஏவி தீமையை விலக்கினார்கள். அவர்களின் மரணத்தோடு நீங்கள் அவர்களை மறந்து விட்டீர்கள். நாய்கூட தன் எஜமானனுக்கு விசுவாசமாக இருக்கிறது என்பது உங்களு க்குத் தெரியுமா? அது எஜமானின் வயலையும், கால்நடை களையும் பாதுகாக்கின்றது. வெறும் சில ரொட்டித் துண்டுகளுக்காக எவ்வளவு நன்றியுணர்வோடும், மகிழ்ச்சியோடும் தன் எஜமானனை எதிர்கொள்கிறது. நீங்களும் அல்லாஹ்வின்அருட்கொடைகளை அனுபவி க்கின்றீர்கள். ஆனால், அவனுக்கு நன்றி தெரிவிப்பதும் இல்லை, அவன் உங்கள்மீது விதித்துள்ள கடமைகளை நிறைவேற்றுவது மில்லை. அதற்கு மாறாக நீங்கள் செய்வதெல்லாம் அவனது கட்டளைகளை மீறுவதும், ஷரீஆவின் வரம்புகளைக் கடந்து அட்டூழியம் செய்வதும்தான்". (பத்துஹுஈர் ரப்பானி\ஷெய்க்அப்துல் காதிர் ஜீலானி\ Pg-649)

ஷெய்க் அப்துல் காதிர் ஜிலானியின் ஆன்மிகப் புரட்சி பக்தாத்தில் ஆயிரங்களை மாற்றியது. அவரது 'காதிரிய்யா' தரீக்கா உலகளாவிய ஆன்மிக இயக்கமாக விரிவடைந்தது. யேமன், சிரியா, எகிப்து வழியாக இந்தியா, ஆப்பிரிக்காவை சென்றடைந்த இந்த மார்க்கம், 19ஆம் நூற்றாண்டில் செனகல் முதல் நைஜர் வரை கல்வி மையங்களை நிறுவியது. குர்ஆன் கல்வி, ஆன்மிகம், தர்வீஷுஈ பணிகளை ஒருங்கிணைத்த இந்த மையங்கள், தாமஸ் ஆர்னால்ட் குறிப்பிட்டபடி, சூடானில் இஸ்லாமிய கல்வியின் தலைசிறந்த முன்மாதிரிகளாக விளங்கின.

## ஷெய்க் அப்துல் காதிர் ஜீலானியை பற்றின புகழ்மாலை.

இன்றைக்கு தமிழ் இலக்கியங்களில் அப்துல் காதிர் ஜீலானியை பற்றி இயற்றியுள்ள பல நூல்களிலும் அவரின் புகழையும் அவர் ஆற்றிய அற்புதங்களையும் மட்டுமே மிக பரவலாக காணப்பெறுகிறது இதில் பல காப்பிய கலைஞ்சர்களின் புகழ் மாலைகள் இங்கே குறிப்பிடபட்டுள்ளது. சீருலவு கருணை யால் எவ்வுலகும் எந்தெந்த ஜீவ ஜெந்தும் புகழவே செய்துதம் நிலையோடு உறம்காக்கும் முறைவாழி தேடரிய மெய்மைவாழி

- பாருலவு மன்பதைகள் மற்றவைகள் நேசர்வாழி பயின்றுதற் கதிபெருகுவான்
- பண்ணரிய மறைகொண்டு தூதாகி வந்தநம் பார்த்திபர் முஹம்மது றசூல்
- பேருலவு தவமென்ன வருகின்ற பெண்பிள்ளை பெற்றபிள்ளைப் பேரராய்ப்
- பேதகத் துழல்கின்ற சிறியோர்கள் உறுதிநிதிப் பேறென வருங்குரிசிலே
- மூரியந் தவமன்னர் வாழுநகர் பகுதாதின் முச்சுடர் நின்றிலங்கு
- முஹியித்தீன் முஹியித்தீன் என்றவரும் ஏத்தவரும் முஹ்யித்தீன் முஹ்யித்தீனே

சேகனாப் புலவர்.

மேலும் ஆண்டகை ஆற்றிய அற்புதங்கள் எனும் தலைப்பில் முஹியூதீன் புராணத்தில் உள்ள படலங்கள் விவரிக்கும் ஆண்டகையின் அற்புதங்களை பட்டியல் இட்டு தனது வண்ணக்களஞ்சியப்புலவரின் குத்புநாயகம் எனும் ஆய்வுரையில் எடுத்து காட்டுகிறார் முனைவர் மு. அப்துல் கறீம்.

"ஆண்டகை ஆற்றிய அற்புதங்கள்

(படலங்களில் விரித்துப் பேசப் பட்டவை)

1. அன்னையின் கருவிலிருந்து வேங்கையாக வெளியே வந்து பூதத்தைக் கொன்றது.
2. கதிரவனை அழைத்துத் தம்மை ஏழு முறை வலஞ் சுற்றச் செய்த அற்புதம்.
3. பகுதாது போகும் வழியில் வாய்மையால் திருடர் கூட்டத்தைத் திருத்தியது.
4. தீனுக்குப் புத்துயிரூட்டி 'முகியித்தீன்' என்ற பட்டம் பெற்றது.
5. பாம்பாக வந்த ஜின்னின் சோதனையில் வென்றது.
6. மன்சூரின் தர்க்க வாத நூலை வேறு நூலாக மாற்றியது.
7. ஆண்டகை அபுல்கபுசின் ஐயம் தீர்த்தது.
8. வகுறம் (அபுல் கைறு) ஆண்டகை அவை சேர்ந்து புதுமைகள் கண்டது
9. முதல் ஹஜ்ஜுஈப் பயணத்தில் நிகழ்ந்த அறிவூதங்கள்.
10. மதினாவில் நபிகள் நாயகத்தோடு வசனித்தது.
11. அபாபக்கரில் சும்மாமியை ஒறுத்துத் திருத்திய அற்புதம்
12. அபுல் மஆலியின் மகனுடைய சுரம் போக்கியது.

13. இசுபகான் நகரப் பெண் தலை ஆடையை ஆண்டகை அவையில் எறிந்து, மீண்டும் ஆண்டகை தோளி லிருந்து அதனைப் பெற்றுக் கொண்டதை கண்டுரைத்த அற்புதம். ஆண்டகை
14. ரபிகள் நாயகம் அபுல் ஹஸனலியின் கனவில் தோன்றி அவரை ஆண்டகை பால் ஆற்றுப்படுத்தியது.
15. நபிகள் நாயகமும் அலியாகும் கனவில் வந்து ஆண்ட கைக்கு வாயமிழ்து ஊட்டியது.
16. அவையில் நபிகள் நாயகத்தைச் செய்கு அலி கனலில் கண்டதை ஆண்டகை நனவில் கண்டது.
17. மகுறூபில் சுறுக்கி தம் புதை குழியில் இருந்தவாறே ஆண்டகையின் ஞான நிலைகளைப் புகழ்ந்து வாழ்த் தியது.
18. செய்குமார் நாட்டங்களை ஆண்டகை நிறைவேற்றியது.
19. செய்கு உதுமானைக் கிலிறுநபிமூலம் தம்பால் அழைத்துக் கொண்டது.
20. அபுல் முலப்பரின் உயிரையும் உடமை யையும் காத்தமை.
21. துறவிக்கு உதவி ஓடக் காரனைச் செல்வ னாக்கியது.
22. செய்கு அப்துற்றஹ்மான் அனுப்பிய செய்தி வருமுன்னரே அவர் ஐயத்திற்கு விடையனுப்பி, அவர் செருக்ககற்றியது.
23. காபு மலைத் தலைவர் நால்வரும் ஆண்டகை புகழ் உரைத்தது.
24. நபுனான் (அபுனான்) மலைவாழ் இறை நேயர்கள் ஆண்ட கையின் தவ உயர்வையும் வலிமையையும் உரைத்தது.
25. முன்கர் நக்கீர் எனும் வானவர் தடி பறித்து அவருக்கு அறி வுறுத்தியது.
26. கூற்றுவனிடமிருந்து உயிரை மீட்டது.
27. திருடனைக் கையால் அடித்து அவரை இறை நேயராக ஆண்டகை ஆக்கியது.
28. அறபிக்குப் பிள்ளைப் பேறுதலியது.
29. நல்லடியார்களுக்குத் தொல்லை கொடுத்த நசாறாக்களை (கிறித்துவர்களை) இறை மார்க்கத்தில் இணைத்தது.
30. செருக்குற்ற செய்குநனாவின் இறை நேயத்தைப் பறித்துத் தண்டித்தது.
31. குன்ம நோயாளியின் துயரை முன்னரே அறிந்து குதிரை களை வாங்கிய நிகழ்ச்சி.
32. கடலில் இறந்தவளை மீட்டுத் தந்தது.
33. இறந்தவளை எழுப்பிப் பிள்ளைப்பேது தந்தது.
34. இறைநெறி பிழைத்த செய்கை உருமாற்றி ஒறுத்தது.
35. பெண் பிள்ளைகளை ஆண்களாக மாற்றி மீட்டும் பெண் பிள்ளைகளாக மாற்றியது.
36. ஆடை நெய்லோன் வாழ்ந்த நாட்டு மென்னனையும் மக்களையும் அத்நகரை இருளிவாழ்த்தித் திருத்தியது" (வண்ணக் களஞ்சியப் புலவரின் குத்புநாயகம் ஆய்வுரை\ முனைவர் மு. அப்துல் கறீம்\ Pg-24,25,26)

### முடிவுரை

தமிழகத்தில், ஷெய்க் அப்துல் காதிர் ஜிலானி என்ற ஆன்மிகத் தலைவரின் போதனைகள் 'காதிரிய்யா' எனும் சூபி வழிமுறையின் மூலம் பரவியிருந்தாலும், அந்தப் போதனைகளை விட முஹியுதீன் அவர்களின் புகழும், அவர் செய்த அற்புதங்களைப் பற்றிய காப்பியங்களும் பாடல்களுமே தலையோங்கி நிற்கின்றன. இந்த இலக்கியங்களில் அவரைப் பற்றி மிகைப்படுத்திக் கூறப்பட்டிருப்பதால், தமிழக மக்கள் அவரை 'ஆண்டகை' (மாபெரும் வீரர்) என்று போற்றுகின்றனர். ஆனால், அவரது போதனைகளுக்கு இணங்கி வாழும் மக்கள் எத்தனை பேர் என்பது ஒரு விடையற்ற கேள்வியாகவே உள்ளது.

### அடிக்குறிப்பு

1. முஸ்லிம்களும் தமிழகமும்\ முனைவர் எஸ் எம் கமால்\ pg—24

2. பத்துஹூர் ரப்பானி \ஷெய்க்அப்துல் காதிர் ஜீலானி\ Pg—649

3. வண்ணக்களஞ்சியப்புலவரின் குத்புநாயகம் ஆய்வுரை\ முனைவர் மு. அப்துல் கறீம்\ Pg-24,25,26

### உச்சாத்துணை நூல்கள்

1. ஸூபித்துவம் இஸ்லாத்தின் ஆன்மிகப் பரிமாணம் ஏம். ஏ. எம். சுக்ரி சீர்மை பதிப்பகம்
2. வலிமார்கள் வரலாறு அப்துர்ரஹீம் யூனிவேர்சல் புபிலிஷேர்ஸ்
3. வண்ணக்களஞ்சியப்புலவரின் குத்புநாயகம் ஆய்வுரை முனைவர் மு. அப்துல் கறீம் உலக தமிழாராய்ச்சி நிறுவனம்
4. முஸ்லிம்களும் தமிழகமும் முனைவர் எஸ் எம் கமால் இலக்கியச்சோலை
5. பத்துஹூர் ரப்பானி ஷெய்க்அப்துல் காதிர் ஜீலானி அல்ஜமல் புப்லிஷேர்ஸ்